(ஒ) கோட்டூர் ஒன்றியம் நல்லூரில் ஒரு சத்துணவு அமைப்பாளர் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாகக்கூறப் பெறுவது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் கவன ஈர்ப்புத் திர்மானம் ஐந்து தினங்களுக்கு முன்னாலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்களுடைய கவனத்திற்கு இது முக்கியமான விஷயம். நானும்சேர்ந்து கொடுத்திருக்கிறேன். முக்கியமான விஷயம் மட்டும் அல்ல. அந்தப் பகுதியிலே மிகப் பெரிய பதட்டத்தை ஏற்படுத்தியிருக்கின்ற விஷயம். ஒரு சத்துணவு அமைப்பாளர் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டிருக்கிறார் சரியான நடவடிக்கை காவல் துறையில் எடுக்கப்படவில்லை. மேலும் அங்கே ஒரு பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலே ஒரு மாதத்திற்கு முன்னாலேயே தகவல் எழுத்து மூலமாக அனுப்பியிருக்கிறார். சம்பவம் நடந்தது 40 தினங்களுக்கு முன்னால், இன்றைக்கு இந்த அவையினுடைய இந்தக் கூட்டத் தொடரினுடைய கடைசி நாள். ஆகவே, அவையிலே இதற்கு உண்டான விளக்கம் பெறுவதற்கு வேறு வாய்ப்பு இல்லை. ஆகவேதான் கடைசியாக அவர் அந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வருகிறார். கொஞ்சம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவரவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டு, அவைகள் எடுக்கப்படமுடியாத சூழ்நிலையில் அவைத் தலைவருடைய அறைக்குச் சென்று, தொடர்புடைய உறுப்பினர்கள், இது கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுக்கப்படவில்லை, அவையிலே எழுப்புவதற்கு ஒரு வாய்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வது, உசிதம் போல், அவைத் தலைவரவர்கள் அதற்கு உரிய ரூலிங்—ரூலிங் என்றுதான் ஆங்கிலத்தில் இருக்கிறது, தீர்ப்பு என்றுதான் இப்பொழுது தற்காலிகமாக தமிழ்ச் சொல் இருக்கிறது—அத்தகைய உசிதமான தீர்ப்பை வழங்குவதும் நடைமுறையிலே இருந்து வருவது. அப்படி அவர் தங்களிடத்திலே அறையிலே வந்து கேட்டிருந்தால், அதுபற்றிய தகவலைத்தெரிந்து கொள்கின்ற வாய்ப்பை எனக்கு அளிக்க வேண்டும்.

11-35 மணி

அவர் கேட்டாரா என்பது தெரியவில்லை. எனக்கு வாய்ப்பு இங்கே வழங்குகிற வகையில் விவரங்களைச் சேகரித்துக்கொண்டு வாருங்கள் என்ற யோசனை எனக்கு சொல்லப்படவில்லை. இருந்தாலும், அந்தப் பிரச்சினையை எழுப்ப

வேண்டுமென்று திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் விரும்புகிறார் என்ற காரணத்தால் அவரை அனுமதிக்கலாம். அதை நான் தெரிந்து கொண்டு விரைவாக அது குறித்து நடவடிக்கைகள் அரசின் சார்பிலே மேற்கொள்ளப்படும்.

திரு. ஜி. பழனிச்சாமி: துணைத் தலைவர் அவர்களே, கடந்த 19-12-1989 அன்று சத்துணவு அமைப்பாளர் சாவித்திரி, என்னுடைய தொகுதியில் கோட்டூர் ஒன்றியத்தைச் சார்ந்தவர். நல்லூர் ஊராட்சியில் பணியாற்றி வந்தவர். மாலை 4-30 மணிக்கு தன்னுடைய பணிகளை முடித்து விட்டு வீடு செல்கிறபோது நான்குபேர்கள் சேர்ந்து அவரை கற்பழித்து கொலை செய்துவிட்டு, அந்த அமைப்பாளரை நெய்வேலி காட்டாமணக்கு செடிகளுக்கு அருகில், ஆற்று ஓரத்தல் முடியை இழுத்து கட்டிவைத்து விட்டு, நான்கு தினங்களாக அவர் கிடைக்கவில்லை. அவருடைய கணவர் பல இடங்களில் தேடிப் பார்த்து கிடைக்காமல் போலீஸ் துறையில் புகார் கொடுத்து இருக்கிறார். போலீஸ் துறையில் நாய் வரவழைக்கப்பட்டு அந்த அம்மையாரின் உடல் கண்டெடுக்கப்பட்டது. அதன்பிறகு குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க முடியவில்லை. அதற்கு பிறகு நல்லூர் கிராமத்தில் இருக்கிற ஒருவரை கண்டுபிடித்து, அந்த அம்மையார் அணிந்திருந்த நகைகளை சீஸ் பண்ணி எடுத்தார்கள். அந்தக் குற்றவாளி தான் மட்டும் செய்யவில்லை, நான்கு பேர்கள் சேர்ந்து செய்திருக்கிறோம் என்று பொதுமக்களிடமும் போலீஸ் இன்ஸ்பெக்டரிடமும் அறிவித்து இருக்கிறார். அந்த இடத்திலேயே இன்ஸ்பெக்டர் ஊரைக் கூட்டி அந்த நான்கு பேர்களை கண்டுபிடித்துக் கொடுப்பது அந்த ஊரின் பொறுப்பு என்றும் இல்லையென்றால் யாரையும் விட மாட்டேன் என்றும் அறிவித்தார்கள். அதன்பிறகு சப்-இன்ஸ்பெக்டர் அந்தக் குற்றவாளியை விசாரித்து, எந்தக் குற்றவாளி முன்பு கைது செய்யப்பட்டாரோ அவர் பெயரை மட்டும் தான் அந்த வழக்கிலே எடுப்பதற்கு முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பாக்கியிருக்கிற மூன்று பேரை அந்த வழக்கிலே சம்பந்தப்படுத்தாமல் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே அரசியல் கட்சிகள் பேதம் பாராமல், அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து, ஜாதி மதம் பாராமல் ஐந்தாயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தி, கலெக்டரிடம் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர் சொன்ன அந்த மூன்று பேர்களும் முன்ஜாமீன் எடுத்துக்கொண்டு ஊரிலே திரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. அந்த அம்மையாருக்கு நான்கு பெண் குழந்தைகள் இருக்கின்றன. எனவே, இதில் உரிய நடவடிக்கையெடுத்து குற்றவாளிகளை கண்டுபிடிக்கிற வகையிலே

நடவடிக்கையெடுக்க வேண்டும். நல்ல திட்டங்களை பெண்களுக்கென்று அறிவித்து, ஆண்களுக்கு சமமான உரிமையென்று கொண்டு வந்திருக்கிற நம்முடைய அரசு பாகுபாடு காட்டாமல், நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நோக்கத்தில் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, வினாவையும் எழுப்பி, விளக்கத்தையும் அவரே தந்திருக்கிறார். காவல் துறை அங்கே வெறுமனே இருக்கவில்லை என்பதையும் காவல் துறை விரைந்து செயல்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இருக்கிறது என்பயையுதம் அந்தக் குற்றவாளி சுட்டிக்காட்டிய இன்னும் 2, 3 பேர்களை கைது செய்யவில்லை என்பதையும் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் முன் ஜாமீன் எடுத்துவிட்ட காரணத்தால் ஒருவேளை கைது செய்யப்படாமல் இருக்கலாம். உறுப்பினர் அவர்கள் இங்கே அளித்த இந்தத் தகவலின் அடிப்படையில் மாவட்ட காவல் துறையோடு நம்முடைய காவல் துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். நானும் அதற்கான முயற்சிகளை எடுப்பேன்.

5. கவனி ஈர்ப்பு

(அ) பேராவூரணித் தொகுதியில் தெருவிளக்கு இரும்புக் கம்பங்கள் பல துருப்பிடித்துள்ளதால் பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நிலைமை இருப்பது குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : துணைத் தலைவர் அவர்களே, ‘‘பேராவூரணி தொகுதி எல்லைக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட தெரு விளக்குக் கம்பங்கள் துருப்பிடித்துள்ளது குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :